10.11.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

# நெல்லுக்கு காப்பீடு செய்ய நவ.30 கடைசி நாள்



கடலூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஜி.ஆர்.முருகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்படி நெல் பயிருக்கு காப்பீடு செய்ய நவ.30ஆம் தேதி கடைசி நாளாகும். இத்திட்டத்தில் அனைத்து நெல் பயிரிடும் விவசாயிகளும் சேர்ந்து பயனடையவும், உரிய காலத்தில் திட்டத்தினை செயல்படுத்தி முடிக்கும் நோக்கிலும் வேளாண்மைத்துறை இணை இயக்குநரால் விவசாயிகளுக்கு புதிய வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி நெல் பயிரிடும் விவசாயிகள் வங்கியின் கடன் பெறும்போது, பயிர்க் காப்பீடு செய்ய ஏதுவாக அவர்களின் கடன் தொகையிலிருந்து பிரீமியம் தொகை பிடித்தம் செய்து உரிய நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் கடன் பெறாத நெல் பயிரிடும் விவசாயிகளும் இத்திட்டத்தில் பயிர் காப்பீடு செய்யலாம்.

இதற்காக மத்திய அரசால் கடலூர் மாவட்டத்துக்கு பயிர்க் காப்பீடு செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ள ஐசிஐசிஐ வங்கி சிறப்பு பிரதிநிதிகள் சார்பில் குறிப்பிட்ட தேதிகளில் கிராமங்களுக்குச் சென்று விவசாயிகளிடத்தில் நேரடியாக வருவாய் ஆவணங்கள் மற்றும் பிரீமியம் தொகையினை பெற்று அதற்குரிய ரசீது வழங்கப்படும் என அதில் தெரிவித்துள்ளார்.

## கரூப்பூர் சேனாபதி கிராமத்தில் கடலை விதை உற்பத்தி பயிற்சி



அரியலூர் மாவட்டம், கருப்பூர் சேனாபதி கிராமத்தில் அட்மா மற்றும் வேளாண் விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின்கீழ் எண்ணெய் வித்து பயிர்களில் ஒன்றான கடலை விதை உற்பத்தி பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. பயிற்சி முகாமை, மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ரெ. சதானந்தம் தொடங்கி வைத்து, கடலை சாகுபடி மேற்கொள்ளவதன் அவசியம் குறித்தும், இந்திய சந்தையில் கடலையின் விலை ஏற்ற, இறக்கம் பற்றியும், மண் பரிசோதனை செய்து உரமிட வேண்டியதன் அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார். அரியலூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் சி. பாஸ்கரன் முன்னிலை வகித்து, எண்ணெய் வித்து பயிர்களில் ஜிப்சம் மற்றும் நுண்ணூட்ட கலவை இட வேண்டும் என்றார். கிரீடு வேளாண் அறிவியல் மைய பேராசிரியர் ராஜாஜோஸ்லின் பயிற்சியில் கலந்து கொண்டு, கடலை சாகுபடியில் விதைநேர்த்தி, விதை அளவு,

பயிர் இடைவெளி, நிர்வாகம், நீர் பாசனம், உர நிர்வாகம், அறுவடை உத்திகள் குறித்து எடுத்து கூறினார்.

அட்மா தொழில்நுட்ப மேலாளர் ந.பழனிசாமி, எண்ணெய்வித்து பயிர்கள் சாகுபடிக்கான மானியங்கள்,அட்மா திட்டம் மூலம் நடக்கப்படும் பண்ணைப் பள்ளியில் கலந்து கொள்ளும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

கடலை சாகுபடி செய்யப்பட்ட வயலுக்கு விவசாயிகள் நேரடியாக அழைத்துச் செல்லப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டது.

ஏற்பாடுகளை அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் இரா.வாசுகி,சுந்தரமூர்த்தி மற்றும் வேளாண் உதவி அலுவலர் ம.சுப்ரமணியன் ஆகியோர் செய்திருந்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தமிழகத்தின் சிரபுஞ்சி**

புவியியல் அமைப்பில் மேகாலயாவில் உள்ள சிரபுஞ்சியைப் போன்று இருந்து, அதிக மழைப்பொழிவையும் பெறுவதால் வால்பாறையை 'தமிழகத்தின் சிரபுஞ்சி' என்கின்றனர். வால்பாறை என்று ஓர் இடம் இருப்பதை கஅஅ0ல் காரல்மார்க்ஸ் என்ற ஆங்கிலேயர்தான் கண்டுபிடித்தார். வால்பாறையை தமிழகத்தின் சிரபுஞ்சி என கூறினாலும் வால்பாறைக்கு அருகில் உள்ள சின்னகல்லார் தான் தமிழகத்திலேயே அதிக மழைப்பொழிவைப் பெறுகிறது. மேற்குத்தொடர்ச்சி மலையில் ஆனைமலையில் கடல் மட்டத்தில் இருந்து ஙூ ஆயிரத்து ரு00 மீட்டர் உயரத்தில் வால்பாறை உள்ளது. காபி, ஏலக்காய், தேயிலை, சின்கோனா ஆகியன வால்பாறையில் அதிகம் விளைகின்றன.

## உழவர் பாதுகாப்பு திட்ட உறுப்பினர் ஆதார் எண் விதைப்பு குறித்த பயிற்சி

கோபி: உழவர் பாதுகாப்பு திட்ட உறுப்பினர்களின், ஆதார் எண் விதைப்பு (இணைப்பு) குறித்து வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு, கோபியில் பயிற்சி நடந்தது.

கோபி சப்-கலெக்டர் கிருஷ்ணன் உண்ணி தலைமையில் பயிற்சி நடந்தது. துணை கலெக்டர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ராதாமணி, தாசில்தார்கள் குமரேசன், மனுநீதி, குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உழவர் பாதுகாப்பு திட்டத்தில், இரண்டரை முதல் ஐந்து ஏக்கர் வரை உள்ளவர்கள் உறுப்பினராக சேர்க்கப்பட்டுள்ளனர். உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினராக உள்ளவர்களின், ஆதார் எண் இணைப்பது குறித்த பயிற்சி, கோபி சப்-கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. பயிற்சியில் கோபி மற்றும் பவானி தாலுகாவுக்கு உட்பட்ட, வி.ஏ.ஓ.,க்கள் மற்றும் ஆர்.ஐ.,க்கள் பங்கேற்றனர்.

## தோட்டக்கலை பயிர் சாகுபடி பரப்பு அதிகரிக்கப்படும்: கலெக்டர் தகவல்

திண்டுக்கல், 'திண்டுக்கல் மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்களின் சாகுபடி பரப்பு அதிகரிக்கப்படும்' என கருத்தரங்கில் கலெக்டர் வினய் தெரிவித்தார். மாவட்ட தோட்டக்கலைத்துறை, மலைப்பயிர்கள் துறை சார்பில், காந்திகிராம வேளாண் அறிவியல் மையத்தில் 2 நாள் காய்கறி சாகுபடி பயிற்சி கருத்தரங்கு நேற்று துவங்கியது.

இதில் கலெக்டர் வினய் பேசியதாவது: தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியாகும் மாவட்டங்களில் திண்டுக்கல் முக்கிய இடத்தில் உள்ளது.

இங்கு பழம், காய்கறிகள், மலைத்தோட்டப் பயிர்கள், சுவை தாழித பயிர்கள், மருத்துவப் பயிர்கள், மலர்கள் உள்ளிட்டவை சாகுபடியாகிறது. தற்போது மாவட்டக்கில் கோட்டக்கலைப் பயிர்கள் 69 ஆயிரக்கு 736 எக்டேர் பரப்பில் உள்ளது. இவற்றை அதிகரிப்பதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு சாகுபடி பரப்பு அதிகரிக்கப்படும், என்றார்.

கருத்தரங்கையொட்டி கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. விழாவில் தோட்டக்கலை துணை இயக்குனர் சுரேஷ்ஸ்ரீராம், வேளாண் துணை இயக்குனர் பாஸ்கரன், காந்திகிராம வேளாண் அறிவியல் மைய பேராசிரியர் உதயகுமார், விஞ்ஞானி செந்தில்குமார், ஆத்துார் தோட்டக்கலை உதவி இயக்குனர் ஹெட்டிபாய், தோட்டக்கலை சாகுபடி விவசாயிகள், கல்லுாரி மாணவர்கள் பங்கேற்றனர்.

## தென்னை சாகுபடியால் விவசாயிகள் மகிழ்ச்சி

செங்காட்டானூர்: கரூர் அருகே செங்காட்டானூர் பகுதியில் தென்னை மரங்கள் நன்கு வளர்ந்துள்ளதால் தேங்காய்கள் பறிக்கப்பட்டு பல்வேறு இடங்களுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. கரூர் அடுத்த செங்காட்டானூர் பகுதியில் நிலக்கடி நீர் மூலம் நீர் பாய்ச்சப்பட்ட நிலையிலும், அவ்வப்போது பெய்யும் மழை காரணமாகவும் தென்னை மரங்கள் நன்கு வளர்ந்துள்ளது. தற்போதைய சூழ்நிலையில் காவிரிப்படுகை ஓரம் மட்டும் தான் தென்னை, வாழை, வெற்றிலை பயிராகிறது. மற்ற இடங்களில் எல்லாம் மானாவாரி பயிரான சோளம், கம்பு, தீவனப்புல் சாகுபடி செய்யப்படுகிறது. சிலர், மொத்தமாக தென்னந்தோப்புகளை குத்தகைக்கு எடுத்து பராமரித்து வருகின்றனர். தேங்காய் முற்றியவுடன் சீசனுக்கு ஏற்ப பறித்துச் சென்று விடுகின்றனர். ஆனால், பறிக்கும் காய் ஒன்று, ஐந்து ரூபாய் அளவில் நிலத்தின் உரிமையாளர்களுக்கு வழங்குகின்றனர். அவர்கள், தேங்காய்களை உரித்து பல்வேறு இடங்களுக்கு அனுப்பி வருகின்றனர். தற்போது, வி ?ஷச நாட்கள் அதிகம் வருவதால், விலையும் ஓரளவு கிடைப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## விவசாயிகளுக்கு விளக்கம்

தேனி: பெரியகுளம் தோட்டக்கலை கல்லுாரி ஆராய்ச்சி நிலைய நான்காம் ஆண்டு மாணவிகள் ஆர்த்தி, அருள் சோபியா, அதிசிந்தா, மோகன பிரியா, பாரதி, புவனேஸ்வரி, பவ்யா, மிரியம் அமல சலீஷா ஆகியோர் அன்னஞ்சி விவசாயிகளுக்கு குழித்தட்டு முறையில் நாற்றங்கால் அமைத்தல் குறித்து செயல்முறை விளக்கம் அளித்தனர். உயிர் உரங்கள் பயன்பாடு, பட்டுப்புழு வளர்ப்பு குறித்து நாகலாபுரத்திலும் செயல் விளக்கம் செய்து காட்டினர்.

## போடியில் மழையால் விவசாய பணிகள் தீவிரம்

போடி, போடியில் பெய்த தொடர் மழை காரணமாக வறண்டு கிடந்த கொட்டகுடி ஆற்று பகுதியில் நீர்வரத்து வரத் துவங்கியது. விவசாயத்திற்கான நடவு பணிகளும் மும்முரமாக நடந்து வருகிறது.

போடி பகுதியில் கடந்த 10 மாதங்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்திருந்தது. இதனால் ஆறு, கண்மாய்களில் நீரின்றி வறண்ட நிலையில் காணப்பட்ட தோடு, நிலத்தடி நீர்மட்டமும் குறைந்தது.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக மழை பெய்ததால் கொட்டகுடி ஆற்று பகுதியில் நீர் வரத்து வரத்துவங்கியுள்ளது.

இதனால் வானம் பார்த்த பூமியாக இருந்த அம்மாபட்டி, சில்லமரத்துப்பட்டி, ராசிங்காபுரம் உள்ளிட்ட பகுதிகளில் சோளம், நிலக்கடலை, பயறு வகைகளை நடவு செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்ற னர். மீனாட்சிபுரம் பகுதியில் நெல் நடவுக்காக, நிலத்தை உழவு செய்வதற்கான பணிகளும் நடக் கிறது.

## விவசாயிகளுக்கு விளக்கம்

தேனி: பெரியகுளம் தோட்டக்கலை கல்லுாரி ஆராய்ச்சி நிலைய நான்காம் ஆண்டு மாணவிகள் ஆர்த்தி, அருள் சோபியா, அதிசிந்தா, மோகன பிரியா, பாரதி, புவனேஸ்வரி, பவ்யா, மிரியம் அமல சலீஷா ஆகியோர் அன்னஞ்சி விவசாயிகளுக்கு குழித்தட்டு முறையில் நாற்றங்கால் அமைத்தல் குறித்து செயல்முறை விளக்கம் அளித்தனர். உயிர் உரங்கள் பயன்பாடு, பட்டுப்புழு வளர்ப்பு குறித்து நாகலாபுரத்திலும் செயல் விளக்கம் செய்து காட்டினர்.

## மிளகாய் சாகுபடி செய்து அதிக லாபம் பெற அழைப்பு

உத்தமசோழபுரம்: மிளகாய் சாகுபடி செய்து, அதிக லாபம் பெற, விவசாயிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனைக்குழு செயலாளர் செல்லதுரை கேட்டுக்கொண்டுள்ளார். இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை: சேலம் மாவட்டத்தில், ஆத்தூர், பெத்த நாயக்கன்பாளையம், இடைப்பாடி, கெங்கவல்லி, மேட்டூர், ஓமலூர், காடையாம்பட்டி மற்றும் வாழப்பாடி பகுதிகளில், 615 ஹெக்டேரில் மிளகாய் பயிரிடப்பட்டுள்ளது. அதில், மேட்டூர் வட்டத்தில் மட்டும், 303 ஹெக்டேர்

பரப்பளவில் மிளகாய் பயிரிடப்பட்டுள்ளது. நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மிளகாயில், 80 சதவீதம் உள்நாட்டு தேவைக்கு பயன்படுகிறது. மீதமுள்ள, 20 சதவீத மிளகாயை, காய்ந்த மிளகாய் மற்றும் மிளகாய் தூள் போன்றவற்றை தயார் செய்து, அமெரிக்கா, இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. நடப்பாண்டு மழை அளவு குறைந்ததால், மிளகாய் உற்பத்தி குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், மிளகாய்க்கு கிராக்கி ஏற்பட்டு, விலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், சேலத்தில், அதிக லாபம் தரும் மிளகாயை சாகுபடி செய்து, அருகில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடங்களுக்கு எடுத்து வந்து, ஏலம் விட்டு, விவசாயிகள் பயன் அடைய வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தீவன பற்றாக்குறை: நாட்டுமாடு விலை சரிவு**

பள்ளிபாளையம்: பள்ளிபாளையம் பகுதியில், வறட்சி காரணமாக தீவன பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதன் எதிரொலியாக, நாட்டு மாடுகளின் விலை குறைந்துள்ளது.

பள்ளிபாளையம் சுற்றுவட்டார பகுதியில், அதிகளவு நாட்டு மாடுகள் வளர்க்கப்படுகின்றன.ஒரு நாட்டு மாடு, 80 ஆயிரத்தில் இருந்து, ஒரு லட்சம் ரூபாய் வரை விலை போகும். தற்போது, பருவமழை பெய்யாததால், தீவன சாகுபடிக்கு கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், கால்நடைகளின் தரம் குறைந்துவிட்டது. குறிப்பாக, நாட்டுமாடுகளின் விலை, 20 ஆயிரம் ரூபாய் வரை குறைந்துள்ளது.

இதுகுறித்து, வெப்படையை சேர்ந்த நாட்டு மாடு வளர்ப்பில் ஈடுபட்டவர் கூறியதாவது: நாட்டு மாட்டின் பால், அதிக நோய் எதிர்ப்பு சக்தி கொண்டதால், மாடுக்கு எப்போதும், நல்ல விலை இருக்கும். ஜூன் மாதம் பருவமழை பெய்யாததால், மாட்டிற்கு தேவையான தீவனத்தில் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால், மாட்டின் தரம் குறைந்து விட்டது. சந்தையில் மாடுகளை விற்கச் சென்றால், 80 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மாடுகள், 60 ஆயிரம் ரூபாய்க்குத்தான் தான் விலை போகின்றன. நவம்பர் மாதம் வட கிழக்கு பருவ மழை பெய்தால்

தான், கால்நடைக்கு தீவன சாகுபடி கிடைக்கும். பருவமழையை எதிர்பார்த்து உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பயிறு வகைகளில் உற்பத்தியை அதிகரிக்க...

திண்டுக்கல்: சாணார்பட்டி வட்டாரம் ராகலாபுரத்தில் பயிறு வகை பயிர்களில் உற்பத்தியைப் பெருக்கிட தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மை உதவிஇயக்குநர் இளங்கோவன் தலைமை வகித்து பேசுகையில், 'குறைந்த செலவில் அதிக லாபம் கிடைக்க பயறுவகை பயிர்களை பயிரிட வேண்டும். மண் பரிசோதனை முடிவுப்படி உரமிட்டால் உரச்செலவை குறைக்க முடியும்' என்றார்.

உதவி வேளாண்மை அலுவலர் உத்தமபுத்திரன் ஒருங்கிணைந்த உர நிர்வாகம் மற்றும் பூச்சிநோய் தடுப்பு குறித்து விளக்கம் அளித்தார். தொடர்ந்து அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் பொன்.தமிழரசு மற்றும் சேகர் ஆகியோர் விதை நேர்த்தி குறித்து செயல்விளக்கம் அளித்தனர். அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா நன்றி கூறினார்.

### வறட்சியை சமாளிக்க சிறுதானிய விதைகள்

இளையான்குடி, : இளையான்குடி பகுதியில் வறட்சியை சமாளிக்க சிறுதானிய விதைகளை வழங்க மாவட்ட வேளாண்மைத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.இளையான்குடி வட்டாரத்தில் வேளாண்மை சாகுபடிகள் அனைத்தும் வடகிழக்கு பருவமழையை நம்பியே நடைபெறுகிறது. இந்த பகுதியில் ஆண்டிற்கு முக்கிய பயிர்களான நெல் சுமார் 15ஆயிரம் ஹெக்டேர் அளவிலும், மிளகாய் 4 ஆயிரம் ஹெக்டேர் அளவிலும், பருத்தி 7ஆயிரம் ஹெக்டேர் அளவிலும், சாகுபடி செய்யப்படுகிறது.

கடந்த மூன்றாண்டுகளில் போதிய மழை இல்லாததால் கண்மாய்கள், பண்ணைக்குட்டைகள் அனைத்தும் வறண்டு கிடக்கிறது. அதனால் விவசாயத்தை

காப்பாற்ற முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். தற்போது பெய்யவேண்டிய வடகிழக்கு பருவமழையும் பொய்த்துப் போனதால் நெல், மிளகாய் விதைகள் சரியாக முளைத்து மண்ணைவிட்டு வெளிவரவில்லை. முளைத்த பயிர்கள் அனைத்தும் கடும் வெயிலால் கருகி வருகின்றன. அதனால் நெல் விவசாயம் முற்றிலும் அழியும் நிலையில் உள்ளது. ஆகவே வறட்சியைப் போக்க சோளம், கம்பு, கேழ்வரகு, குதிரைவாலி, எள், தினை உள்ளிட்ட சிறுதானிய பயிர் விதைகளை இளையான்குடி வட்டார விவசாயிகளுக்கு வழங்க மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேளாண்மைத்துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.இதுகுறித்து விவசாயி குணசேகரன் கூறுகையில், “வடகிழக்கு பருவமழையை நம்பியே இளையான்குடி பகுதி விவசாயிகள் விவசாயம் செய்கிறோம். ஆனால் பருவமழையும் ஏமாற்றிவிட்டது. அதனால் வறட்சியைப் போக்க சிறுதானிய விதைகளை வழங்க கலெக்டர், வேளாண் அதிகாரிகள் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றார்.

## சின்னமனூர் பகுதியில் அவரைக்காய் அமோக விளைச்சல் விவசாயிகள் மகிழ்ச்சி

சின்னமனூர், : மழை பெய்யாததால் நோய் தாக்குதலில் இருந்த தப்பிய அவரை அதிக விளைச்சல் கண்டுள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.சின்னமனூர் பகுதியில் குறுகிய காலப் பயிர்களாக காய்கறிகளை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். கிணறு மற்றும் போர்வெல் பாசனத்தை நம்பி விவசாயிகள் தொடர்ந்து சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் செடி அவரை ஒரு முறை நடவு செய்து 50 நாட்களில் அறுவடைக்கு வரத் தொடங்கினால் தொடர்ந்து 3 மாதம் வரையில் வாரம் ஒரு நாள் பலன் கொடுத்து வரும். அப்படி ஒரு ஏக்கருக்கு 12 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரையில் செலவு செய்கின்றனர். இயற்கையால் பழுதில்லா வளர்ச்சி கண்டால் ஏக்கருக்கு 120 கிலோ முதல் 150 வரை அவரைக்காய் கிடைக்கும். பயிர் வளரும்போது மழை பெய்தால் அது டானிக் போன்றதாகும். ஆனால், அறுவடை நெருங்கிடும் நேரம் மழை பெய்தால் உடனடியாக நோய் தாக்குதலுக்குள்ளாகும். இதனால், உற்பத்தி குறைந்து 3 மாதத்திற்குள் எதிர்பார்க்கும் காய்கள் பலனுக்கு வராமல் பாதிக்கப்படும். கடந்த வாரத்தில் அவரைக்காய் பல இடங்களில் அறுவடை துவங்கி நடந்து வருகிறது. குறிப்பாக இந்த அறுவடை நேரத்தில் வடகிழக்குப் பருவமழை தீவிரம் அடைந்திருந்தால் நோய் தாக்கப்பட்டு உற்பத்தி

குறைந்திருக்கும். சரியான மழை இல்லாத காரணத்தால் அவரை உற்பத்தி அதிகரித்துள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், “வட கிழக்குப் பருவமழை சரிவரரப் பெய்யாததால் அவரை உற்பத்தி அதிகரித்துள்ளது. இந்த நேரத்தில் மழை பெய்து இருந்தால் நோய் தாக்கப்பட்டு முற்றிலும் பாதிக்கப்பட்டிருக்கும். அறுவடை தொடங்கியிருப்பதால் கிலோ ரூ.25 வரை விலைபோகிறது. இரண்டு வாரத்திற்கு முன் ரூ.50 வரை விலை போனது. உற்பத்தி அதிகரித்திருப்பதால் விலையும் குறைந்திருக்கிறது. இருந்தும் உற்பத்தி அதிகரித்து கட்டுபடியான விலை கிடைப்பதால் மகிழ்ச்சி அடைந்திருக்கிறோம்” என்றனர்.